Registered as a news paper in Ceylon.

ஆயர் வெள்ளிவிழாச் சிறப்பிதழ்

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

| மலர் 4 | மட்டக்களப்பு | புரட்டாதி – 1972 | விலை 30 | இதழ் 9 |
| --- | --- | --- | --- | --- |

## தலைவன்



திருமலை – மட்டுநகர்
சேர்ந்த மறை மாநிலத்தை
இருபத்தைந் தாண்டாய்
இன்னல்களுக்கிடையே
அருமையாய் ஆண்டுவரும்
ஆத்மீகத் தலைவன்;
வருங்காலச் சந்ததிக்கு
வழிகாட்டியாவான்.

இக்னேஷியஸ் என்னும்
எழில் நாமம் பூண்டோன்;
முக்காலமும் உணர்ந்த
முனிவனின் தோன்றல்;
இக்காலம் அக்காலம்
இணைக்கின்ற பாலம்;
மக்களின் உள்ளத்தில்
மனைநிறுவி வாழ்வோன்.

நானென்ற மலம் வென்று
நல்லாட்சி செய்வோன்;
தானேற்காக் கொள்கைக்கும்
தலை வணங்கி நிற்போன்;
வான்புகழ் மறைக்காக
வாழ்வையே தந்தோன்;
ஊண் துயில் நீத்து
ஊருக்கே உழைப்போன்.

இரக்கத்தால் இழகிடும்
இதயத்தைப் பெற்றோன்;
இருக்கின்ற செல்வத்தை
எல்லார்க்கும் ஈவதில்
கருங்காது விரிந்திட்ட
தூய செங்கையன்;
கர்ணனின் அவதாரம்
கடை வள்ளலப் பாரி.

''வாகரைவாணன்''
சுட்டபொன்
என்ற நூலில்.

"திருச்சட்டத்தை அழிக்கவல்ல... நிறைவேற்றவே வந்தேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பேரருள்திரு இக்கினேசியஸ் கிளெனி இ. ச. ஆண்டகை அவர்கட்கு

## இயேசு சபைத் தலைவர்

# அருள்திரு பேதுரோ அறுப்பே அடிகள்

## மேற்றிராணித்துவ வெள்ளி விழாவுக்கு அனுப்பிய கடிதம்.

உரோமை,
22 ஆனி 1972.

பேரருள்திரு ஆண்டகை அவர்களே,

தாங்கள் திருகோணமலை ஆயராக நியமனம் பெற்று 25 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இம் மகிழ்ச்சிக்குரிய சம்பவத்தைக் கொண்டாட தங்கட்கு ஆசிச் செய்திகளும், வாழ்த்துக்களும் வந்து குவிந்துகொண்டிருக்கும் இத் தருணத்தில், தங்கள் அன்பர்களோடும் ஆதரவாளர்களோடும் நானும் சேர்ந்து தங்கட்கு வாழ்த்துக்கள் கூறவும், இறைவன் தங்கட்கு அளித்த அருள்கட்கும் கொடைகட்கும் அவருக்கு நன்றி கூறவும் விழைகின்றேன்.

''விசுவாசிகளை மேற்பார்வையிடும் அலுவலை ஏற்க விழைபவன் ஒரு மேன்மையான தொழிலையே விரும்புகின்றான்'' (1 திமோ. 3, 1) என்று புனித சின்னப்பர் கூறியிருப்பினும், தாங்கள் 1935ல் அமெரிக்காவை விட்டுப் புறப்பட்டபோது ஆயர் பதவியை அடையவேண்டுமென்று கனவிலுங்கூட நினைத்திருக்க மாட்டீர்கள். தங்கட்குக் குறிக்கப்படும் இடத்தில் வாழும் மக்களுக்குக் கிறிஸ்துவின் நாமத்தையும் நற்செய்தியையும் கொண்டுசெல்லத் தாங்கள் தங்களை இறைவனுக்குக் கையளித்ததை நடைமுறையில் நிறைவேற்ற வேண்டுமென்று மட்டுமே நினைத்திருப்பீர்கள்.

1947இல் தாங்கள் திருகோணமலை மேற்றிராசனத்தின் ஆயராக நியமனம் பெற்றதால் திருச்சபைக்குத் தாங்கள் எவ் வழியில் தொண்டுசெய்ய வேண்டுமென்று இறைவன் தெளிவாகக் காட்டினார். எவ் வழியிலும் பணிபுரியத் தயாராயிருக்க வேண்டுமென்ற புனித இன்னுசியாரின் படிப்பினைக்கிணங்க, தாங்கள் பாப்பரசரின் சித்தத்திற்குப் பணிந்தீர்கள். குருமடத்தையும் இறையியல் கற்பிப்பதையும் துறந்து, வேறுபட்ட, ஆயருக்குரிய பொறுப்புகள் என்ற புது உலகில் புகுந்தீர்கள். அன்றுதொட்டு தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களுக்குப் பணிபுரிய அயராது உழைத்துவந்துள்ளீர்கள்.

கடந்த 25 ஆண்டுகளில் தங்கள் மேற்றிராசனம் (அது இப்போது **திருகோணமலை-மட்டக்களப்பு** என்ற பெயர் கொண்டு விளங்குகிறது) படிப்படியாக முன்னேற்றமடைந்துள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். துறவற குருக்களும், சிறப்பாக மேற்றிராசனக் குருக்களும், குரு மாணவர்களும், துறவற சகோதர சகோதரிகளும் கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளனர்; துணை ஆயர் ஒருவரும் அபிஷேகம் செய்யப்பட்டுள்ளார்; சிற்றாலயங்களும், ஆலயங்களும், பங்குகளும் பெருகியுள்ளன; இறைமக்கள் தொகையும் இருமடங்குக்குமேல் கூடியுள்ளது. தாங்கள் நீர் பாய்ச்சினீர்கள், இறைவன் வளர்ச்சி அளித்தார் (1 கொரி. 3, 7).

தாங்கள் எங்கள் செயலகத்தைத் தரிசித்ததின் நினைவு என் மனதில் இன்றும் உண்டு. இலங்கை இப்போது ஒரு பூரண சுதந்திரக் குடியரசு ஆகிவிட்டது. கத்தோலிக்க மக்கள் மற்றக் குடிமக்களோடு சேர்ந்து, நாட்டை எதிர்த்து நிற்கும் பல பிரச்சினைகளைத் தீர்க்க உழைக்கவேண்டும்.

தங்கள் வருங்கால 25 ஆண்டுகட்கும் நல்லாசியும் வாழ்த்துக்களும் கூறுகின்றேன்.

—பேதுரோ அறுப்பே இ. ச.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பேரருள்திரு இக்னேசியஸ் கிளெனி இ. ச. ஆண்டவர் அவர்களின் மேற்றிராணித்துவ வெள்ளி விழாவுக்கு

### மகா மேன்மைதங்கிய

# கருதினல் தொமஸ் கூறே O. M. I. ஆண்டகை

## அவர்கள் அனுப்பிய ஆசிச்செய்தி.

பேராயர் இல்லம்
கொழும்பு – 8.
1 ஆவணி 1972

இன்று ''ஆட்களிடையே தொடர்பு'' என்பதே எங்கும் பேச்சு. இப் பேச்சு இக் காலத்தில் தொடங்குமுன்னரே இத்தகைய தொடர்புகள் நடைமுறையில் இருந்து வந்துள்ளன என்பதை நினைவுகூர்தல் நன்ருகும்.

வெள்ளி விழா நாயகராகிய, எமக்கு மிகவும் அருமையான இக்கினேசியஸ் கிளெனி ஆண்டகையின் ஆயருக்குரிய தொடர்புகளின் முக்கிய அம்சங்களைப் பல ஆண்டுகளுக்கு இன்னும் மறைத்துவைக்கவேண்டிய விவேகத் திரையை ஓரளவு நீக்கினுல், பல நலன்களை நாம் பெறுவதோடு மற்றவர்களுக்கும் அவற்றை அளிக்க முடியும். நல்லவர்கள் உண்மையை இலகுவாய்க் கண்டுபிடித்துவிடுவார்கள். கடந்த 25 ஆண்டுகளிலும் இக்கினேசியஸ் கிளெனி ஆண்டகை தமது மேற்றிராசனத்தில் மட்டுமல்ல, தமது சகோதர ஆயர்கள் வழியாக இலங்கை முழுவதிலுமே ஒற்றுமைக்கும் நல்லுறவுக்கும் காரணமாக இருந்துவந்துள்ளார் என்பதை, அவரைப்பற்றிய எல்லா விபரங்களையும் அறியாமலே மக்கள் உணர்ந்து கொள்கின்றனர். கனிவு அவரில் காட்சியளிக்கின்றது; அவரது மெல்லிய குரல் அதைத் தாங்கி வருகின்றது; அவரது புன்முறுவலில் அது பிரதிபலிக்கின்றது; ஒரு இரகசியப் பண்பு அதன் உண்மைத்தனத்தைக் காட்டி, சார்புள்ளவர்களை வசீகரிக்க மட்டுமல்ல, எதிரிகளை அடிபணியச் செய்யவும் அதற்கு வலிமை அளிக்கின்றது.

இவ் ஆசிச் செய்தியைப் படிப்போரிடம் இதை நாம் இடித்துரைக்க வேண்டியதில்லை. ஏனெனில் அவர்கள் யூபிலி நாயகரை நன்கு அறிவார்கள். ஆனுல், இதன் இரகசியத்தை அறிய பலர் ஆசிப்பார்கள். பிற்காலச் சரித்திரம் மட்டுமே ஆராய உரிமையுள்ள விடயங்களைக் கூருமல், அனுபவத்தால் நாம் அறிந்த சில விதிகளின்படி, இக்கினேசியஸ் கிளெனி ஆண்டகையுடைய கனிவின் வல்லமைக்குக் காரணம், அவர் ஆன்மாக்களோடு தொடர்பு கொண்டமையால் வளர்ச்சியுற்று, அனுபவங்களால் முதிர்ச்சியடைந்த இருதயத்தின் நன்மைத்தனமே என்று கூறின் அது பிழையாகாது.

ஆன்மாக்களோடு தொடர்பு கொள்வதற்கு இக்கினேசியஸ் கிளெனி ஆண்டகை கண்டியிலிருந்த பாப்பரசரின் குருமடத்தின் அதிபராய்க் கடமை புரிந்தபோது அவருக்கு அரிய சந்தர்ப்பங் கிடைத்திருந்தது. அவ் வேளை அக் குருமடத்தில் இலங்கையிலும் இந்தியாவின் பல்வேறு பாகங்களிலுமிருந்து வந்த மாணவர்கள் கல்வி பயின்றனர். அவர் தமது கடமைகளை உணர்ந்து நிறைவேற்றிய போது அவ் ஆன்மாக்களோடு ஆழமான முறையில் தொடர்பு கொண்டார். திவ்விய குருவின் சீடர்களாக அழைப்புப் பெற்ற அவர்கள் அவ்வழைப்பிற்குப் பதில் அளிக்க முயன்றதை அவர் அறிந்து அதற்கேற்றவாறு அவர்களோடு தொடர்புகொண்டார்.

அங்கு அவர் பெற்ற அனுபவம், திருகோணமலை ஆயரானபின் மேற்றிராசனத்தின் பொதுவான ஆயர்பணிக்குரிய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு மட்டுமன்று, சிறப்பாக குருக்களின் முழுமையான நலனை விரும்பி நிறைவேற்றுவதற்கும் அவருக்கு உறுதுணையாக நின்றுள்ளது. கிழக்கு மேற்றிராசனத்தில் மேற்றிராசனக் குருக்களின் வளர்ச்சியும் இக்கினேசியஸ் கிளெனி ஆண்டகையின் ஆட்சிக் காலமும் சம இரேகைகளைப்போல் காட்சியளிப்பதை அவதானிக்கும் எவரும்,

[8ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பேரருள்திரு இக்னேஷியஸ் கிளெனி ஆண்டகையின் ஆட்சிப் பணி.

## காமல் இக்னேஷியஸ்

இறைவன் காலத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற வகையில் நாட்டிற்கு நற்தலைவர்களைத் தந்தருளுகின்றார். ஆம் அவ்வாறு அன்று மரணத்திரையில் மறைந்துவிட்ட மகா வந். ரோபிஷோ ஆண்டகை அவர்களின் இடமாக பரிசுத்த தந்தை 12ம் பத்திநாத பாப்பரசரால் திருமலை மறைமாவட்ட ஆயராக 1947ம் வருடம் ஆடி மாதம் பத்தாம் திகதி நியமனம் செய்யப்பட்டு, அதே ஆண்டு புரட்டாதித் திங்கள் 21ந் திகதி அபிஷேகம் செய்யப்பட்டார் அதி. வண. இக்னேஷியஸ் கிளெனி ஆண்டகை அவர்கள். அவர் 1935ம் வருடம் அமெரிக்காவிலிருந்து ஈழம் வந்த இயேசுசபைக் குருமார் மூன்று பேரில் ஒருவர் ஆவர்.

ஆண்டகை அவர்கள் பதவிக்கு வந்தது எம்மவர் பலருக்கு நேற்றுப்போல் தோன்றினாலும் இவ் இருபத்தைந்து ஆண்டுகளிலும் தொடர்ந்து ஆற்றிவந்த பணிகள் அளவிட்டுக் கூறமுடியாதவைகளாகும்.

ஆயனின் ஆட்சியில் மந்தைகள் பெற்று வரும் பயன்களை மறந்து விடுதல் எளிதல்லவே. ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்றமகற்கு'' என்னும் அருளுரையை நாம் நினைவிற் கொள்ளுதல் அவசியமாகும். இம்மேற்றிராசனத்தில் அவரின் தூய்மையான கரங்களால் அத்திவாரமிடப்பட்ட தேவாலயங்கள் பல, ஆசீர்வதிக்கப்பட்ட ஆலயமணிகள் பல, முறையே இன்று வானளாவ எழுந்து நின்று ஆயரின் புகழ் பாடுகின்றன. தினம் தினம் தந்தையின் பெருமையை, ஓங்கார இசையுடன் ஆர்ப்பரிக்கின்றன.

குடிசைக் கோயில்கள் பலவற்றைப் பாரிய தேவாலயங்களாக மாற்றிய பெருமை ஆயரையே சாரும். ''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்னும் மூதுரைக்கொப்ப, தந்தை அவர்கள் கத்தோலிக்க மக்கள் வாழ்ந்த கிராமங்களில் இன்று கோயில்கள் நிறுவியிருக்கிறார்கள். பாழடைந்த பாடசாலைகள் பல நவீன முறையிலே திருத்தியமைக்கப்பட்டிருப்பதுடன், அவசியப்பட்ட இடங்களிலே பாடசாலைகளைப் புதிதாகவும் அமைத்திருக்கிறார்கள்.

தந்தையின் திருக்கரங்களால் திருவிருந்து பெற்றோரும் உறுதிப்பூசுதல் பெற்றோரும் அநந்தம் பேர். கிளெனி ஆண்டகை அவர்கள் ஆயராகிய அதேவருடமே கல்முனை நகரம் திரு இருதய ஆண்டவர் நாமத்தில் புதியதொரு பேராலயத்தைக் கண்டுகளித்தது. தொடர்ந்து திருமலை சின்னக்கடை குவாடலூப் மாதா ஆலயத்தையும், அம்பாறை புனித இக்னேஷியஸ் லோயோலா ஆலயத்தையும், கல்லாறு புனித அருளானந்தர் ஆலயத்தையும், மட்டுநகர் கல்லடி புனித இன்ஞசியார் ஆலயத்தையும், ஹிங்குருகொடை கிறிஸ்துநாதர் ஆலயத்தையும், தன்னாமுனை புனித சூசையப்பர் ஆலயத்தையும், அக்கரைப்பற்று புனித ஆரோக்கியமாதா ஆலயத்தையும், கோமாரி புனித மைக்கல் தூதர் ஆலயத்தையும், வாழைச்சேனை புனித தெரேசம்மாள் ஆலயத்தையும் கண்டுகளித்தன.

இன்னும் பல தேவாலயங்களும் கால விரைவில் ஆயரின் அரிய முயற்சியால் அமைக்கப்பட்டுள்ளன. பெரிய புல்லுமலை புனித செபமாலை மாதா ஆலயம் அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கிழக்கிலங்கையின் யாத்திரைத் தலமாகத் தனித்துவம் பெற்றுள்ளது. இன்று மக்களிடையே பிரபல்லியம் பெற்றுள்ள ஆயித்தியமலைத் திருப்பதி, தேத்தாத்தீவுத் தேவாலயம் இவைகளும் ஆயரின் பணியைப் பிரஸ்தாபிக்கின்றன.

[16ம் பக்கம் பார்க்கவும்]

**ஆயரின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம்**

மட்டக்களப்பு மைதானத்தில்
புரட்டாதி 22, 1972
பி. ப 5-30க்கு
**பொதுப் பாராட்டுக் கூட்டமும்.**
**கூட்டுப் பூசையும்,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

(துணை ஆயர்)

## (38) புதிய திருமணத் திருச்சடங்கு முறை.

திருத்தியமைக்கப்பட்ட திருமணத் திருச்சடங்கு முறைப்படி கத்தோலிக்க மக்களிடையே நடைபெறும் திருமணங்கள் பொதுவாகப் பூசையின்போதே நிறைவேற்றப்பட வேண்டும். கத்தோலிக்கர் ஒருவருக்கும் ஞானஸ்நானம் பெற்ற கத்தோலிக்கர் அல்லாத ஒருவருக்கும் இடையில் நடைபெறும் திருமணம் மறைமாவட்ட ஆயரின் அனுமதியுடன் பூசையில் நிறைவேற்றப்படலாம். ஆனுல், கத்தோலிக்கர் அல்லாதவர் திவ்விய நற்கருணை அருந்த முடியாது. கத்தோலிக்கர் ஒருவருக்கும் ஞானஸ்நானம் பெருத ஒருவருக்கும் இடையில் நிகழும் திருமணம் எப்போதும் பூசைக்கு வெளியேயே நிறைவேற்றப்படவேண்டும். திருமணச் சடங்கு, பூசையில் நிறைவேற்றப்பட்டாலும்சரி, பூசைக்கு வெளியே நிறைவேற்றப்பட்டாலும்சரி அதில் எப்போதும் பொருத்தமான திரு வாசகங்கள் வாசிக்கப்பட்டு, அவற்றை விளக்கி ஒரு திருவுரையும் நிகழ்த்தப்படவேண்டும் மணமக்கள் இருவருக்கும் விசேஷ ஆசீரும் அளிக்கப்படவேண்டும்.

### (அ) பூசையில் நிறைவேற்றப்படும் திருமணச் சடங்கு முறை

இச் சடங்கு முறை பின்வரும் பாகங்களை அடக்கியுள்ளது தொடக்கச் சடங்கு, இறைவார்த்தை வழிபாடு, திருமணச் சடங்கு, நற்கருணை வழிபாடு, முடிவுச் சடங்கு, என்பன.

1. தொடக்கச் சடங்கு: குரு மணமக்களைக் கோயில் வாசலில் வரவேற்று, பலிபீடத்திற்கு அழைத்துச் செல்லலாம். இவ்வரவேற்பு நடைபெருவிடின் பூசை வழமைப்படி தொடங்கப்படும்.

2. இறைவார்த்தை வழிபாடு: இது வழமை போல் நடைபெறும். திருமணத்திற்குப் பொருத்தமான திருவாசகங்கள் வாசிக்கப்படும். மூன்று வாசகங்கள் இடம்பெறுமாயின், முதலாவது வாசகம் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்படவேண்டும். திருவாசகங்களைத் தொடர்ந்து குரு அருளுரை நிகழ்த்துவார்.

3. திருமணச் சடங்கு:

(அ) குருவின் ஆரம்ப உரையும் கேள்விகளும்: குரு திருமணத்தைப்பற்றி சில குறிப்புகள் கூறியபின் மணமக்களின் சுயாதீனம், பிரமாணிக்கம், கடமையுணர்ச்சி ஆகியவற்றை அறிந்துகொள்ளச் சில கேள்விகள் கேட்பார்.

ஆ. மணமக்கள் தங்கள் சம்மதத்தை வெளிப்படுத்தல்: மணமக்கள் தங்கள் வலது கைகளைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு தங்கள் சம்மதத்தை ஒருவருக்கொருவர் கூறுவர் அல்லது குரு கேட்கும் கேள்விக்குத் தனித்தனியே பதிலளிப்பர். அவர்கள் அளித்த சம்மதத்தைக் குரு திருச்சபையின்பேரால் இரு சாட்சிகளுடன் ஏற்றுக்கொள்வார்.

(இ) தாலி அல்லது மோதிரம் ஆசீர்வதித்து அணிவித்தல்: அன்பிற்கும் பிரமாணிக்கத்திற்கும் அடையாளமான தாலியை அல்லது மோதிரத்தைக் குரு ஆசீர்வதித்தபின் அது மணமக்களால் அணிவிக்கப்படும்.

(ஈ) விசுவாசிகளின் மன்றுட்டு: தாலி அல்லது மோதிரம் அணிவித்தபின் மணமக்களுக்கென விசுவாசிகளின் விசேஷ மன்றுட்டு இடம்பெறும்.

[6ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இறைவழிபாட்டுச்...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

4. நற்கருணை வழிபாடு: நற்கருணை வழிபாடு வழமைபோல் நடைபெறும். காணிக்கையின்போது மணமக்கள் அப்பத்தையும் இரசத்தையும் பலி பீடத்திற்குக் கொண்டுவரலாம்.

திருமணப் பூசைக்கு இப்போது சிறப்பான நன்றியுரைகள் உண்டு.

மணமக்களின் விசேட ஆசீர்: ஆண்டவர் கற்பித்த செபத்தின் முடிவில் மணமக்கள் இருவருக்கும் விசேஷ ஆசீர் குருவால் அருளப்படும்.

5. முடிவுச் சடங்கு; மக்களை வழமைபோல் ஆசீர்வதிக்குமுன் குரு மணமக்களைத் தனிப்பட்ட முறையில் ஆசீர்வதிப்பார்.

### (ஆ) பூசைக்கு வெளியில் நிறைவேற்றப்படும் திருமணச் சடங்கு முறை.

பூசைக்கு வெளியில் நிறைவேற்றப்படும் திருமணச் சடங்கு முறை பின்வரும் பாகங்களை அடங்கியுள்ளது: தொடக்கச் சடங்கு, இறைவார்த்தை வழிபாடு, திருமணச் சடங்கு, முடிவுச் சடங்கு என்பன.

1. தொடக்கச் சடங்கு; குரு மணமக்களைக் கோயில் வாசலில் வரவேற்று, பலிபீடத்திற்கு அழைத்துச் செல்லலாம். இவ் வரவேற்பு இடம்பெறாவிடின், திருமணச் சடங்கு இறைவார்த்தை வழிபாட்டுடன் ஆரம்பமாகும்.

2. இறைவார்த்தை வழிபாடு: திருமணத்திற்குப் பொருத்தமான திருவாசகங்கள் வாசிக்கப்படும். மூன்று வாசகங்கள் இடம்பெறுமாயின், முதலாவது வாசகம் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பட வேண்டும். திருவாசகங்களை அடிப்படையாகக்கொண்டு குரு அருளுரை கூறுவார்.

3. திருமணச் சடங்கு:

(அ) குருவின் ஆரம்ப உரையும் கேள்விகளும்: குரு திருமணத்தைப்பற்றிச் சில குறிப்புகள் கூறியபின், மணமக்களின் சுயாதீனம், பிரமாணிக்கம், கடமையுணர்ச்சி ஆகியவற்றை அறிந்துகொள்ளச் சில கேள்விகள் கேட்பார்.

(ஆ) மணமக்கள் தங்கள் சம்மதத்தை வெளிப்படுத்தல்: மணமக்கள் தங்கள் வலது கைகளைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு தங்கள் சம்மதத்தை ஒருவருக்கொருவர் கூறுவர் அல்லது குரு கேட்கும் கேள்விக்குத் தனித்தனியே பதிலளிப்பர். அவர்கள் அளித்த சம்மதத்தைக் குரு திருச்சபையின் பேரால் இரு சாட்சிகளுடன் ஏற்றுக்கொள்வார்.

(இ) தாலி அல்லது மோதிரம் ஆசீர்வதித்து அணிவித்தல்: அன்பிற்கும் பிரமாணிக்கத்திற்கும் அடையாளமான தாலியை அல்லது மோதிரத்தைக் குரு ஆசீர்வதித்தபின், அது மணமக்களால் அணிவிக்கப்படும்.

(ஈ) விசுவாசிகளின் மன்றாட்டும், மணமக்களின் விசேஷ ஆசீரும்: விசுவாசிகளின் மன்றாட்டும் மணமக்களின் விசேஷ ஆசீரும் ஒன்றாக இணைத்து நிகழ்த்தப்படும்.

4. முடிவுச் சடங்கு: திருமணச் சடங்கு ஆண்டவர் கற்பித்த செபத்தோடும், மணமக்களுக்கும் பொதுமக்களுக்கும் குரு அளிக்கும் ஆசிரோடும் முடிவடையும்.

மணமக்களும் மற்றவர்களும் தேவநற்கருணை பெற விரும்பினால், அது ஆண்டவர் கற்பித்த செபத்தின்பின் அளிக்கப்படும். ★

---

### மறைக்கல்விப் போட்டி – 4.

**பரிசு பெறுபவர்கள்**

1. E. C. இளெனி, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்நகர்.
2. ம. ஜெசி கோட்டமுனை மகா வித்தியாலயம் மட்டுநகர்.
3. இல்லை.

குறிப்பு:- திருத்திய விடைப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் முத்திரையும் முகவரியும் கொண்ட நீண்ட உறை அனுப்பிவைக்கவும்.

**அருட்திரு றெக்ஸ் யோ. செபமாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வேதாகமத்தைப் படிப்போம்

அருட்திரு. R. S. லோப்பு அடிகள்.

## 6. திருமறை நூலும் இறை ஏவுதலும்

திருமறை நூல் புனிதமானது; திருமறை நூல் திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பரிசுத்த நூற் தொகுப்பு; திருமறை நூல் மூலம் இறைவெளிப்பாடு எமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது, என்றெல்லாம் முன்பு கண்டோம். இவற்றிற்குரிய முக்கிய காரணம்: திருமறை நூலில் அடங்கியிருக்கும் இறைவெளிப்பாட்டு உண்மைகள் எல்லாம் **பரிசுத்த ஆவியின் தூண்டுதலால் எழுதப்பட்டவை என்பதே.** திருமறை நூலிலிருந்து இறை ஏவுதலைப் பிரித்துவிட்டால், வேதாகமம் ஏனைய நூல்களைப்போல் ஒரு சாதாரண நூல் ஆகிவிடும்.

பழைய புதிய ஏற்பாட்டு நூல்கள் யாவும் இறை ஏவுதலால் எழுதப்பட்டவை என்று பரிசுத்த திருச்சபை, அப்போஸ்தலர்களின் விசுவாசத்தைப் பின்பற்றி, ஏற்றுக்கொள்ளுகின்றது. வேதாகமம் இறை ஏவுதலால் எழுதப்பட்டதென்பதை புளாறன்ஸ், திரிதேந்தீன் முதலாம் வத்திக்கான் பொதுச் சங்கங்கள் என்பன வரையறுத்துக் கூறியதை இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம் எடுத்துரைக்கின்றது. இது ஒரு விசுவாச சத்தியமாக இருக்கிறபடியினுல், திருமறை நூற் தொகுப்பு, இறை ஏவுதலால் எழுதப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ளாதவர்களை, திருச்சபை நிராகரித்து பிரித்துவைக்கின்றது.

பழைய ஏற்பாட்டு நூல்கள் இறை ஏவுதலால் வரையப்பட்டவை என்பதை, அப்போஸ்தலர்கள், புதிய ஏற்பாட்டு நூல்களில் கூறுகின்றூர்கள். புனித இராயப்பர், புனித சின்னப்பர் கூறியவற்றை விசேசமாக இரு இடங்களில் காணலாம்: ''ஏனெனில் இறைவாக்கு ஒருபோதும், மனிதரின் விருப்பத்தால் உண்டானதில்லை. மனிதர் பரிசுத்த ஆவியினுல் தூண்டப்பட்டு, கடவுளின் ஏவுதலால் பேசினர்'' (2 இரா. 1 : 21). ''மறை நூலில் உள்ளதெல்லாம், கடவுலால் ஏவப்பட்டுள்ளது. போதிக்கவும், கண்டிக்கவும், சீர்திருத்தவும், இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வில் மக்களை பயிற்றவும் பயன்படும்'' (2 தீமோ. 3, 16)

இறைவெளிப்பாட்டிற்கும், இறை ஏவுதலுக்குமிடையில் நிறைய வித்தியாசம் உண்டு. உண்மையாகவே இறைவெளிப்பாடு கிடைக்கப்பெற்ற ஒருவருக்கு, அப்படியான ஒரு வரம் தனக்குக் கிடைத்திருக்கிறதாக நன்ருகத் தெரியும். ஏற்கனவே தெரிந்திராத விடயங்களை இப்பொழுது நிட்சயமான முறையில் அறிகிரு்ர். இறை ஏவுதலால் எழுதும் எழுத்தாளர் அவ்வண்ணமில்லை. இவ் எழுத்தாளர் தான் அறியாமலே இறைவனின் இவ்வரத்தைப் பெற்றிருக்கலாம். இது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு ஞான ஒளி (Supernatural illumination). இவ்வெளிச்சம் எழுத்தாளருக்கு தெரிந்த உண்மைகளுக்கு எவ்விதத்திலும் அவருக்குச் சாட்சிபகர வேண்டியதில்லை.

ஏனைய நூல்கள்போல் அன்றி, திருமறை நூலுக்கு இரண்டு எழுத்தாளர்கள் (Authors) உண்டு. ஒருவர்: இறைவன், மற்றவர்: சுதந்திரமுள்ள மனிதன். புத்தி சித்தமுள்ள மனிதனை ஒரு கருவியைப் (Instrument) போன்று இறைவன் பாவிக்கின்ருர். மனிதன் ஒரு பேனுவைப் பாவித்து எழுதுவதற்கும், கடவுள் மனிதரை ஒரு கருவிபோலப் பாவித்து, வேதாகம நூல்களை எழுதுவதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. ஒரு பொருளை, அதன் சுபாவத்துக்கு ஏற்றமுறையில் (according to its nature) பாவிக்க வேண்டும். எழுதுகோலை எழுதப் பயன்படுத்தினுல் மட்டுமே அது எழுதும். —

மனிதனைப் பொறுத்தமட்டில் அவ்வண்ணமில்லை. மனிதனுக்குப் பூரண சுதந்திரமுண்டு. புத்தியுண்டு, உணர்ச்சி உண்டு, அனுபவமுண்டு, பழக்க வழக்கம் உண்டு, பண்பாடு, கலாச்சாரம், மரபு உண்டு. மனித

[8ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வேதாகமத்தைப்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

னுடைய சிந்தனைகள், அவனின் பிறப்பு. வளர்ப்பு, படிப்பு, சூழ்நிலை, சந்தர்ப்பம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன.

எரேமியாஸ் திடீர் கோபம் வரும் ஒரு ஆளாக இருந்ததால், இஸ்ரயேல் மக்களின் பிரச்சினை நிறைந்த காலத்தில் எழுதும் வாக்கியங்களில், கோபத் தொனி நிறைந்திருப்பதைக் காண்கின்றோம். தாவீது ஒரு சங்கீத வல்லுநன் என்றபடியால், சங்கீதங்கள் என்ற நூலில், அவர் இயற்றிய அழகான சங்கீதங்களைக் காண்கின்றோம். சின்னப்பர் வார்த்தையில் மட்டுமல்ல செயலில் காண்பிக்கின்ற ஒருவர். லூக்காஸ் சரித்திராசிரியர் என்ற முறையில், விடயங்களை ஆராய்ந்து எழுதுவார். இவ்வாறு, ஒவ்வொருவரின் குணஇயல்புகள், அவரவர் எழுதிய புத்தகங்களில் நிறையக் காணப்படும். ஏனெனில், இறைவன் ஒவ்வொருவரினதும் இயல்புக்கு ஏற்ற முறையில் அவர்களைப் பாவித்திருந்தனர். இவ்வாறு, "இறைவன் அவர்களில், அவர்கள் வழியே செயலாற்ற, அவர்கள் தங்கள் திறமையையும் வலிமையையும் பயன்படுத்தி, உண்மையான ஆசிரியர்கள் என்ற முறையில், **தாம் விரும்பிய எல்லாவற்றையும், அவற்றை மட்டுமே** எழுத்தில் வகுக்குமாறு இறைவன் அவர்களைப் பயன்படுத்தினர். ஆகவே, இறைவனால் ஏவப்பட்ட ஆசிரியர்கள், அல்லது திரு எழுத்தாளர்கள் உறுதியாய்க் கூறும் யாவையும், தூய ஆவியால், உறுதியாய்க் கூறப்பட்டதாகக் கொள்ள வேண்டும் (இறைவெளிப்பாடு இ. 11).

இறைவன் திரு எழுத்தாளர்கள் வழியாக நமக்கு எதை வெளிப்படுத்த விரும்பினர்? சரித்திர, விஞ்ஞான, உலகியல் சம்பந்தமான உண்மைகளை இறைவன் அவர்கள் வழியாகப் போதிக்க விரும்பவில்லை; ஆனால் **மனுக்குலத்தின் மீட்புக்குரியவற்றையே அவர் வெளிப்படுத்த விரும்பினர்.** ஆகவே, நமது மீட்புக்காக, இறைவன் திருமறை நூல்களில் அடக்க விரும்பிய உண்மைகளை மட்டுமே அவை நமக்கு உறுதியுடனும், பிரமாணிக்கத்துடனும், தவறின்றியும் போதிக்கின்றன என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எனவே, திருமறை நூலில் சரித்திர, விஞ்ஞான, உலகியல் சம்பந்தமான பிழைகள் காணப்பட்டால், அவைகளை மனித எழுத்தாளர்களின் தவறுகள் என்றே கருதவேண்டும். **அவை திருமறை நூலின் உண்மைத் தனத்தை எவ்விதத்திலும் பாதிப்பதே இல்லை.** "காலங்கடந்த தந்தையின் வார்த்தையானவர், தொடக்கத்தில் பலவீனம் நிறைந்த மனித உடலை ஏற்றபொழுது எவ்வாறு மனிதனைப்போல் இருந்தாரோ, அவ்வாறே மனிதனின் மொழியில் வெளியிடப்பட்ட இறைவனின் சொற்களும் மனித மொழியை ஒத்தே இருக்கின்றன" (இறைவெளிப்பாடு இ. 13). ❋

## பேரருள்திரு இக்கினேசியஸ்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

அவை இரண்டிற்குமிடையேயுள்ள நெருங்கிய தொடர்பை – அது அவருடைய செபம் நிறைந்த கரிசனையின் விளைவுதான் என்பதை மறுக்கவே முடியாது மேற்றிராசனக் குருக்களின் வளர்ச்சி அவரது குருத்துவ பண்பின் நீடிப்பு என்று கூறின் அது மிகையாகாது.

ஆகவே, இக்கினேசியஸ் கிளெனி ஆண்டகையின் ஆயருக்குரிய 25 ஆண்டுகட்கு இறைவனுக்கு நன்றி கூறுவதிலும், யூபிலி நாயகருக்கு எமது அன்பு நிறைந்த வாழ்த்துக்களைச் சமர்ப்பிப்பதிலும், சிறப்பாக மேற்றிராசனத்தின் குருக்களோடு நாமும் சேர்ந்து கொள்கிறோம்.

உடல் உறுதியும், உளப் பண்புகளும், உதாரகுணமுமுள்ள இளைஞர் மேற்றிராசனத்திலுள்ள கத்தோலிக்க குடும்பங்களில் உதித்து, மேற்றிராசனத்திலும் வெளி இடங்களிலும் குருத்துவ தொண்டாற்ற அழைத்தலைப் போதிய அளவு ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையைவிட வேறு எதுவும் ஆயர் அவர்கட்கு இத் தருணத்தில் கூடிய மகிழ்ச்சியை கொடுக்காதென்று எண்ணுகிறோம்.

திருகோணமலை - மட்டக்களப்பு மேற்றிராசனத்தின் குருக்கள், இறைமக்கள் அனைவருடன் நாமும் சேர்ந்து, அன்புமிக்க ஆயர் அவர்கட்கு "நீர் இறைவனின் ஆசீரை நிறையப் பெற்று, கனிவுள்ள, பிரமாணிக்கமுள்ள உம் நற்பணியை இன்னும் பல ஆண்டுகட்குப் புரிவீராக" என்று நல்லாசி கூறுகின்றோம்.

✠ தொமஸ் கருதினல் கூறே O.M.I.
ஆண்டகை
கொழும்புப் பேராயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலக்கிய மன்றம்

## போர்த்துக்கீசர் காலத்தில் ஈழத்தில் எழுந்த கத்தோலிக்க தமிழ் இலக்கிய நூல்கள்.

(பேரருள்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை)

### (3) ஞானப்பள்ளு எப்போது இயற்றப்பெற்றது?

ஞானப்பள்ளு என்னும் சிறந்த இலக்கிய நூல் போர்த்துக்கீசர் இலங்கையை ஆண்டுவந்த காலத்தில், அதாவது 17 ஆம் நூற்றாண்டில், தோன்றிய ஒரு நூலென்று எல்லாரும் ஒத்துக்கொள்வர். ''பேரான பாராளும் பிடுத்துக்கல் (போத்துக்கல்) மனுவென்றன் பிரதானம் வீசவே – கூவாய் குயிலே'' (செ. 84) என்று அதில் காணப்படும் குயிற் பாட்டிலிருந்து இவ்வுண்மை தெளிவாகின்றது. அது யாழ்ப்பாணத்தில் இயற்றப்பெற்றதென்பதும் வேறொரு குயிற் பாட்டிலிருந்து விளங்குகின்றது: ''தழைவுற்ற யாழ்ப்பாண சத்திய கிறிஸ்துவர்கள் சந்ததமும் வாழவே, கூவாய் குயிலே'' (செ. 85). ஆனால், அது சுட்டிப்பாக எப்போது எழுதப்பெற்றது? "நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், ஞானப்பள்ளு எழுந்த காலம் 1642 எனத் தம் நூல்களிற் பலவிடங்களிலே குறிப்பிடுகிறார். அவர்கொண்ட ஆதாரங்கள் எவையென்று புலப்படவில்லை'' என்று கலாநிதி சதாசிவம் அவர்கள் ஞானப்பள்ளின் புதிய பதிப்புக்கு எழுதிய பதிப்புரையில் கூறுகின்றார். நூலாசிரியரின் பெயரும் தெரியவில்லை. இவ் விடயங்கள்பற்றி ஆராய்ந்தால் நன்றென எண்ணிச் சிறு ஆராய்ச்சி செய்தோம். அதன் முடிவை ஈண்டு குறிப்பிட விரும்புகிறோம்.

**1. ஞானப்பள்ளு வண. செவ்வஸ்தியாம் பொஞ்செக்கா சுவாமிகளின் உதவியோடு இயற்றப்பெற்றது.**

ஞானப்பள்ளு என்னும் தமது நூலை செவ்வஸ்தியாம் பொஞ்செக்கா சுவாமிகளின் உதவியோடு எழுதியதாக ஆசிரியர் தாமே ''அவையடக்கம்'' ''ஆசிரியர் வணக்கம்'' என்னும் இரு பகுதிகளிலும் குறிப்பிடுகிறார்:

செ. 4.

''இறந்த காலமு மற்றுமதிலுள தினி
தறிந்து துறந்தாற் சன்னுசியாஞ்
சிறந்த **செவ்வஸ்தியாம் பொஞ்செக்
கெனுஞ்** சிட்ட தேசிகன் யேசுவின்
நிறைந்த சங்கத்தில் நின்றோங்கு நீதிமான்
நீணிலத்தினிறுத்து தன்மத்தினால்
அறைந்த வேத பள்ளானதினிக்கதை அறி
ஞர் கேட்டிங்கன்பாயாதரிப்பீரே''.

செ. 5.

''நாதனுத்தம யேசு தோழமைச் சபையத
னில் நன்மை குடிகொண்ட முனிவன்,
நம்பிய சன்னுசி பதினுலு கற்பனைகள்
மிக நழுவாதியற்றி வருவோன்,
சேதங்களேதங்கள் பேதங்களில்லாத
**செவ்வஸ்தியாம் பொஞ்செக்கெனுந்**
தேசிகரினுதவியாற் பள்ளினிசை செப்பத்
துணிந்தெனம்மா''.

ஞானப்பள்ளு நூலை இயற்றுவதற்குத் துணை புரிந்த இந்த செவ்வஸ்தியாம் பொஞ்செக்கா சுவாமிகள் யார்? அவர் யாழ்ப்பாணத்தில் எப்போது திருமறைத் தொண்டாற்றினர்? நூலாசிரியர் அவரை எங்கே, எப்போது சந்தித்து அவரின் உதவியைப் பெற்றார்? இவ் வினுக்களுக்குத் தகுந்த விடைகளைப் பெறுதற்கு நாம் செவ்வஸ்தியாம் பொன்செக்கா சுவாமிகளின் வரலாற்றைச் சிறிது ஆராயவேண்டும்.

**2. ஞானப்பள்ளு 1649 க்கும் 1650 க்கும் இடையில் இயற்றப்பெற்றது.**

செவ்வஸ்தியாம் பொன்செக்கா (Sebastian de Fonseca) சுவாமிகள் யேசு சபையைச் சேர்ந்த ஒரு போர்த்துக்கீச குரவர்.

[10ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இலக்கிய மன்றம்...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் ஒரு சிறந்த கல்விமான். தமிழ் மொழியையும் நன்குகக் கற்றறிந்திருந்தார் (Fr. S. G. Perera - The Jesuits in Ceylon (ed 1941) p. 147) இவ்வுண்மைகளை ஞானப் பள்ளின் ஆசிரியரும் குறிப்பிட்டுள்ளார்:

''வேதலடசனதாரி மெஞ்ஞான போத
கன் வித்தியாபாரகனுயர்
வெண்ணிலவு மண்டலம் வெண்கதிரின்
மண்டலம் மேலுலகு விண்மண்டலம்
ஆதிகைக்குள நீளமைம்பூத நிலைகளும்
அண்டகோளச் சொருபமும்
அருவான ஆத்துமா நிலைமை லாபங்களும்
ஆரணப்படி கற்றவன்
நாதனுத்தம யேசு தோழமைச் சபையத
னில் நன்மை குடிகொண்ட முனிவன்
நம்பிய சன்னுசி பதினுலு கற்பனைகள் மிக
நழுவா தியற்றிவருவோன்'' (செ. 5)

செவ்வஸ்தியாம் தே பொன்செக்கா சுவாமிகள் 1645 இல் கொழும்பிலிருந்து இயேசு சபைக் கலாசாலைக்குத் தலைவராக நியமனம் பெற்றுர் (Jesuits in Ceylon: p. 147 ). 1645 இல் கண்டி அரசனிடம் வேறு சிலருடன் தூதுவராக அனுப்பப்பட்டு, அங்கு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார் (Queyroz, The temporal and Spiritual Conquest of Ceylon, Bk. 5, p. 895). கண்டியில் கைதியாக மூன்று வருடங்களுக்குமேல் இருந்தபின் 1649இல் விடுதலை பெற்று கொழும்புக்குத் திரும்பி வந்தார் ( Jesuits in Ceylon p. 149 ). ஆனல், அவர் அங்கு தலைமை வகிப்பதற்குரிய காலம் (மூன்று வருடங்கள்) முடிவடைந்தமையால், அங்கு தங்கியிருக்கவில்லை. 1650இல் கொச்சினிலிருந்த இயேசு சபைக் கலாசாலைக்கு அதிபராக நியமனம் பெற்றுர். பின்பு, அங்கிருந்து 1652இல் தூத்துக்குடிக் கலாசாலைக்கு அதிபராக மாற்றப்பட்டுத் தொண்டாற்றினுர். அதற்குப்பின் அவர் இலங்கைக்கு வந்தாரென்று சொல்வதற்கு எவ்வித ஆதாரமுமில்லை (Document in the S. J. Archives in Rome : Goa 29: Fol. 90r and 93v.)

அந்நாட்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் திருத்தொண்டாற்றிவந்த இயேசுசபைக் குருமாரின் பிரதான இடமாக விளங்கியது **தெல்லிப்பளை**. அங்கு தொண்டாற்றி வந்த **சுவாம் கறுவாலு சுவாமிகள்** (சந்தியோகுமையோர் அம்மானை - பொதுப்பாயிரம் காண்க) 1648இல் கொழும்பிலிருந்து இயேசு சபைக் கலாசாலைக்கு, கண்டியில் கைதியாயிருந்த செவ்வஸ்தியாம் தே பொஞ்செக்கா சுவாமிகளுக்குப் பதிலாக, தலைவராக நியமனம் பெற்றுச் சென்றுர். சென்ற வழியில் அவர் கண்டி அரசனின் படைவீரர் கைவிலகப்பட்டு கண்டிக்கு கைதியாகக் கொண்டு போகப்பட்டார். (Jesuits in Ceylon pp. 146 & 149). 1649இல் விடுதலை பெற்ற பொஞ்செக்கா சுவாமிகள் தமிழ் மொழியை நன்குகக் கற்றறிந்திருந்தமையால் 1650இல் கொச்சினுக்குச் செல்லுமுன் சுவாம் கறுவாலு சுவாமிகளுக்குப் பதிலாக தெல்லிப்பளையில் ஒரு வருடமளவில் ஞானத் தொண்டாற்றியிருக்க வேண்டும். ஏனெனில், 1644க்கும் 1652க்கும் இடையில் அவர் ஒரு வருடமளவு **வேத போதகத் தொண்டில்** ஈடுபட்டிருந்தார் என்று ஒரு சரித்திர ஏட்டில் கூறியிருப்பது மேற்கூறிய காலத்தையே குறிக்கின்றதென்று கொள்ளவேண்டும் (Document in Rome: Goa 29; Fol. 90r). இன்னுமொரு காரணமுண்டு. ஞானப்பள்ளு நூலை இயற்றிய ஆசிரியர் **யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்** அவர் செவ்வஸ்தியாம் தே பொஞ்செக்கா சுவாமிகளை முன் அறியாதவர். ஆகையால் அவரைச் சந்திப்பதற்கு கொழும்புக்கோ, கண்டிக்கோ, கொச்சினுக்கோ, தூத்துக்குடிக்கோ சென்றிருக்க மாட்டார். அவரைத் தற்செயலாக எங்கோ ஓரிடத்தில் சந்தித்ததின் பயனுகத் தனது நூலை இயற்றியிருக்க மாட்டார். சில காலம் அவரோடு பழகி, அவரை நன்கு அறிந்த பின்பே, அவருடைய உதவியோடு அந்நூலை இயற்றியிருப்பார். இந்நூலை அவர் யாத்தபொழுது செவ்வஸ்தியாம் தே பொஞ்செக்கா சுவாமிகள் கொழும்பிலோ, கொச்சினிலோ, தூத்துக்குடியிலோ அதிபராக இருந்திருந்தால் புலவர் அதைத் தமது நூலில் குறிப்பிடாமல் விட்டிருக்கவே மாட்டார். ஆகவே ஞானப்பள்ளு செவ்வஸ்தியாம் தே பொஞ்செக்கா சுவாமிகள் தெல்லிப்பளையில் 1649க்கும் 1650க்கும் இடையில் தங்கியிருந்த அந்தக் குறுகிய காலத்தில் இயற்றப்பெற்றதென்று கொள்ளல் பொருத்தமானதாகும்.

ஞானப்பள்ளு தெல்லிப்பளையில்தான் இயற்றப்பெற்றிருக்க வேண்டுமென்பதற்கு வேறொரு ஆதாரமுமுண்டு. ஞானப்பள்ளு ஒரு **இசை நாடகம்**. அது இயற்றப்பெற்ற காலத்தில் தெல்லிப்பளையில் அப்போஸ்தலரான புனிதர் இராயப்பர் சின்னப்பர் பெயரால் ஓர் அழகான ஆலயம் கல்லால் கட்

(16ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# பெண் குலத்தை உயர்த்திய உத்தமர்.

கலிலேயாக் கடல் காற்றில் அசைந்து ஆடுகிறது. மீன்கள் துள்ளி விளையாடுகின்றன. பார்ப்போர் கண்ணைப் பரவசப்படுத்துகின்றது. இனிய தென்றல் ஓசை இன்பம் ஊட்டுகிறது. துன்பத்தின் மத்தியிலும் இன்பத்தை இறைவன் அளித்துக்கொண்டே வருகிறான். திடீரென மாபெரும் கூட்டம். ஏன் அவர் போகும் இடமெல்லாம், அப்படித்தான். ஏன், தொட்டாலே போதும் என்று தெரிந்தவர்கள்தானே அவர்கள். இந்தக் கூட்டத்தை அவதானித்த பரிசேயர் சும்மா விடுவார்களா? பொறாமையினால் புழுங்கினார்கள். எப்படியாவது மடக்க முயன்றார்கள். பரிசேயர்கள் அவரைச் சோதிக்கும்படி அவரிடம் வந்தார்கள். புருஷன் தன் மனைவியை எக்காரணத்தினாலாவது தள்ளி விடலாமா? இதுதான் கேள்வி. ஏன் தள்ளக்கூடாது? மனைவி கணவனுக்காகத்தானே! அவனது வாழ்க்கையின் குறி அவனது இன்பந்தானே. அவள் அவனது இச்சை விளையாட்டுப் பொம்மைதானே. அவள் அவனது அடிமைதானே! ஏன் தள்ளக்கூடாது? அவளைத் தள்ளி வேறொரு மனைவியைக் கொள்ளக் காரணமும் தேவையோ? கணவனின் விருப்பு வெறுப்புக்குட்பட்டவள் தானே அவள். விருப்பமானால் அவளை வைத்துக்கொள். வெறுப்பானால் அவளை வெளியே தள்ளு. இதுதான் ஆண்களின் மனப்பான்மை. அக்காலத்தில் மட்டும் என்ன? இக்காலத்திலும் கூடத்தான்.

ஆனால், அவர் அப்படிக் கருதவில்லை. அவரும் ஆண்தான். ஆனால் பெண்ணை உயர்வாக எண்ணியவர், அவதியுறும் பெண்ணை ஆதரிப்பவர், அடிமையெனக் கருதப்படும் பெண்ணைக் கைதூக்கி உயர்த்தி, இல்லற சம உரிமைகளை வழங்குகின்றவர் அவர். பெண்பாலாரை உயர்த்துவதற்குஎண்ணி ஒரு பெண்ணையே தம் தாயாகத் தெரிந்து கொண்டவர் ஆதியிலே மனிதரைப் படைத்தவர், ஆண்களை மட்டுமே படைக்காமல் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். இதனாலே சர்வேசுரன் இணைத்ததை மனிதன் பிரியாதிருப்பானாக’.

இம்மொழிகளைப் பரிசேயர் கேட்டார்கள். காரநாசம் போன்ற மொழிகளை உள்ளூர வெறுத்தார்கள். வெட்டி வெட்டிப் பார்த்தார்கள். முழுமையாய் இம்மனிதனை விழுங்கினாலோ என்று வீரிட்டார்கள். எப்படியாகிலும் இவரைத் தொலைத்தே தீர வேண்டும். அங்கு நின்ற பெண்களும் கேட்டார்கள். அவரை மனமார வாயார வாழ்த்தினார்கள். பெண்களை உயர்த்திய புண்ணியவானைப் போற்றினார்கள். தம் நிலையை உயர்த்திய உத்தமனை துதித்தார்கள். எக்காலத்திலும் பெண் வாழ வேண்டியபடி வாழாது தடுக்கின்றனர் பெற்றார், உற்றார். உறவினர், அயலார், அன்னியர், ஏன் எல்

[12ம் பக்கம் பார்க்கவும்]

**சிஸ்ரர் மேரி லில்லிஓசா அ. கா.**
லங்கா மாதா மடம்
அச்சுவேலி.

## மகளிர் மன்றம்...

*(11ம் பக்கத் தொடர்ச்சி)*

லோருந்தான். சில சமயத்தில் சிறு காரியம். சீதனத்தில் சின்னக் குறைவு. எத்தனைபேர் ஒரு பெண்ணை இதற்காக வாழாதபடி பண்ணு கிறார்கள். மாமிக்கு மருமகள் பெரிதல்ல, பணமே பெரிது. பணத்தையே மணம் முடித்து மாழ்கின்றனர். குடும்பங்களைப் பிரிக் கின்றனர். மகனின் பணத்தைப் பறிப்பதற்கு மருமகளையே வீட்டை விட்டு விரட்டுகின்ற னர். கேவலம், வெட்கம், மனிதத் தன்மை அற்ற கோலம். கணவன் தன் மனைவியை அன்போடு நடத்துவதையே சகியாத தாயுள் ளமும் உண்டுதானே! உலகில் இது முறையா? இதைக்கண்ட இறைவன் வாளாதிருப்பாரா? உடனே ஒரு கட்டளை; 'சர்வேசுரன் இணைத் ததை மனிதன் பிரியாதிருப்பானாக'

கலியாணரத்து, மணவிலக்கு, கிறிஸ்துவை தூய்மையில் பின்பற்றுவோரின் கூற்று அன்று. சர்வேசுரன் இணைத்ததை எந்த அரசும் எந்தச் சமுதாயமும் பிரிக்கமுடியாது. மண விலக்கின்பின் மறுமணம் புரிந்து வாழும் ஆணும் பெண்ணும் விபசாரிகள். தலை குனி யாது நடக்கும் நவநாகரீக விபசாரிகள். இதுவா நாகரீகத்தின் உயர்வு? ஆணையும் பெண்ணையும் இணைத்தபோது இறைவன் உரிமையையும் கடமையையும் இணைத்து விட் டார். மக்கட் பேற்றின் சுமையைத் தாங்கத் தனிப்பட்ட இன்பத்தை அளித்தார். ஆனால், மனிதன் உரிமையையும் கடமையையும் பிரிக் கிறான். உரிமையை அனுபவிக்கிறான், கடமை யைக் கைநெகிழ விடுகிறான். மக்கள் வேண் டாமென்று மண்டியிடுகிறான். கருவை தடுக் கிறான். இது அநீதி, முறைகேடானது. இல் லறக் கனிகளான மக்கள் வேண்டும். நாம் அவர்களுக்காக வாழவேண்டும். நம் மக்களுக் காகத் தியாகம் செய்யவேண்டும். இன்பமோ துன்பமோ, உயர்வோ தாழ்வோ, வறு மையோ பெருமையோ, பிள்ளையோ பிள்ளை யின்மையோ எல்லாம் அவருக்காக. மனைவி மக்கள் குடும்பம் எல்லாம் அவருக்காக. இப் படியான மனப்பான்மை எம்மிடமிருந்தால் இல்லறம் இன்பம் கொழிக்கும் இன்பப் பூங் காவாகும். ஆண் பெண்ணை மதிக்கும் காலம் கெதியில் பிறக்கும். பெண் இனம் வாழ வழி வகுக்கும் காலம் வெகுதூரம் இராது. ஆகவே, பெண் இனத்தை மதித்தவரிடம், உலகம் உய்ய வேண்டுவோமாக! ★

## திருகோணமலை - மட்டக்களப்பு மேற்றிராசன ஐக்கிய சங்கம்.

### நினைவூட்டல்

***பிராந்திய ரீதியில் செய்யவேண்டிய கருமங்கள்:—***

(அ) பொது நிலையினர் அப்போஸ்தலப் பணி யின் பிராந்திய சபைகள்:—

1. வருடாந்த அறிக்கையைப் புரட்டாசி 10க்கு முன் பிராந்திய சபைக்கு அனுப்பவேண்டும்.
2. புது உத்தியோகஸ்தர்களின் பெயர்க ளைப் பிராந்திய அத்தியட்சகருக்குப் புரட்டாசி 15க்கு முன் அறிவிக்க வேண்டும். (உபவிதி 5)

(ஆ) பிராந்திய சபைகள்:—

1. வேலை வருடம் ஐப்பசி 1ல் ஆரம்ப மாகி அடுத்த வருடம் புரட்டாசி 30ல் முடிவடையும். (உபவிதி 4)
2. செலுத்தவேண்டிய கட்டணத்தைப் புரட்டாசி 30க்குமுன் தி. ம. மே. ஐ. ச. தனாதிகாரிக்கு அனுப்பவேண்டும். (விதி 25)
3. வருடாந்த அறிக்கையை ஐப்பசி 10க்கு முன் தி. ம. ஐ. ச. காரி யதரிசிக்கும் பிரதம அத்தியட்சகருக் கும் அனுப்பவேண்டும். (உபவிதி 8)
4. புதிய உத்தியோகத்தர்களின் பெயர் களை ஐப்பசி 10க்குமுன் தி. ம. மே. ஐ. ச. பிரதம அத்தியட்சகருக்கும் செயலாளருக்கும் அறிவிக்க வேண் டும். (உபவிதி 7)
5. பிரேரிக்க விரும்பும் தி. ம. மே. ஐ. ச. பதவியாளருக்கான பெயர்களை ஐப்பசி 15க்குமுன் தி. ம. மே. ஐ. ச. பிரதம அத்தியட்சகருக்கும், செயலாளருக்கும் அனுப்பவேண்டும். (விதி 17, 2)
6. வருடாந்த பொதுக்கூட்டத்தில் பிரே ரிக்க விரும்பும் பிரேரணைகளை இரு வாரங்களுக்கு முன் பொதுக் காரிய தரிசிக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். (விதி 13 (1)

(இ) பிராந்திய ஐக்கியசங்கங்கள்:—

வருடாந்த பொதுக்கூட்டம் புரட்டாசி மாதக் கடைசி வாரத்தில் நடைபெற வேண்டும் (விதி 23)

செயலாளர்
தி. ம. மே. ஐ. சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிறீஸ்தவ வாழ்வுச் சமூகங்களும், தலைமைத் தன்மையும்

அரசியலில் ''சமூகங்கள்'' என்ற பதத்தை நாம் பாவிக்கும்போது, ஒரு சமூதாயத்தின் அங்கங்களையே குறிப்பிடுகிறோம், இதே கருத்தில்தான் கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்கள் என்பதைப் பற்றி நாம் பேசும் போது அது கிறிஸ்தவ சமுதாயத்தின் ஒரு அங்கம் என்பதையே நாம் மனத்தில் கொள்ளவேண்டும். சமுதாயத்தில் சமூகங்கள் எத்துணை முக்கியத்துவம் வகிக்கின்றனவோ, அதே போன்று கிறிஸ்தவ சமுதாயத்திலும் இந்த கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. சமுதாயம் வளர்ச்சியடைய வேண்டுமானால், சமூகங்கள் சிறந்தனவயாக இருக்க வேண்டும்; ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். இதைப் போன்றுதான் கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்கள் தங்களுடைய ஒன்றிப்பினால், சேவைகளினால் கிறிஸ்தவ சமுதாயம் வளர்ச்சியடைய முயற்சியெடுத்து வருகின்றன: மற்றவர்களோடு ஒத்துழைக்கின்றன.

சமுதாயம் வளர்ச்சியடைய வேண்டுமானால் சமூகங்கள் வளர்ச்சியடைய வேண்டும். சமூகங்கள் வளர்ச்சியடைய வேண்டுமானால் அதன் அங்கங்களான குடும்பங்கள் வளர்ச்சி பெற வேண்டும். குடும்பங்கள் வளர்ச்சியடைய அதில் சிறந்த தலைவர்கள் உருவாக வேண்டும்.

''தலைவர்கள்'' என்று கூறும்பொழுது, மற்றவர்களைவிட மேலாக, அவர்கள் மேல் அதிகாரம் செலுத்துகின்ற, உயர்ந்த பீடமாக இருக்கும் என்றுதான் நம்மில் பலர் நினைக்கலாம். ஆனால், இத்தகைய ஒரு தலைமையை கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்கள் உருவாக்கவில்லை. மாறாக தன்னிலேயே ஒருவன் **தலைமைத் தன்மை** கொண்டவனாக இருப்பதற்கேற்ற தகைமையையே உருவாக்க முயற்சிக்கிறது. தன்னிலேயே அவன் தலைமை அடைய வேண்டுமாயிருந்தால், முதலில் அவன் சிந்திக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். சுறுசுறுப்பாகச் சிந்திக்க வேண்டும். சிந்திப்பதோடு மாத்திரம் நின்று விடாமல், அதை முடிவு செய்து, செயலில் காட்டக்கூடிய மன வலிமையை உடையவனாகவும் இருக்கவேண்டும். இத்தகைய ஒரு மன நிலையை ஒருவன் பெற்றுக்கொண்டால், அவன் வாழ்வின் எந்தக் கோணத்தில் இருந்து வரும் பிரச்சினைகளையும் வென்று முன்னேற்றப் பாதையில் செல்லக் கூடிய திறமை உள்ளவனாக மாறுகிறான்.

தலைமை, தலைவர் என்று நாம் கூறும் பொழுது யாரும் தலைவர்கள் என்ற அட்டையுடன் ஒட்டிப் பிறப்பதில்லை. தலைவர்களின் குடும்பத்தில் பிறப்பதாலும் தலைவர்கள் ஆகிவிடுவதில்லை. மந்திர, தந்திர சக்திகளால் தலைவர்கள் ஆகிவிடுவதுமில்லை. சமுதாயத்தில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் சாதாரண ஒரு மனிதனாகவே பிறக்கிறான்; வாழ்கிறான். இப்படியே அவன் இருந்துவிட்டாலும் அவன் திடீரென்று தலைவனாகிவிடப் போவதில்லை சமுதாயத்தில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனிடமும் தலைவன் ஆகக்கூடிய தகைமைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், அவன் தனக்குள்ள அந்த ஆற்றலை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் இல்லாத காரணத்தால் ஒதுங்கி வாழ்கிறான். ஆகவேதான் அவனுடைய ஆற்றலை வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும். இச் சந்தர்ப்பங்களை உருவாக்கும்போது அவனை தலைவனாக மாற்றிவிட நாம் முயற்சிக்கிறோம். திடீரென ஏற்படும் சில மாற்றங்களினால் ஒரு மாணவன் குடும்பத் தலைவனாக அல்லது தொழிற்சங்க உயர் அதிகாரியாக, அல்லது சமூகத்தில் ஒரு பிரமுகராக, அல்லது வறுமையான வாழ்க்கை வாழவேண்டியவனாக, முன்மாதிரி காட்டவேண்டியவனாக மாறலாம்; மாற்றப்படலாம். இத்தகைய சந்தர்ப்பங்கள் சொல்லிக்கொண்டு வருவதில்லை. எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத சூழ்நிலைகளில் உருவாகின்றன. இத்தகைய நேரத்தில்தான் ஒருவனுக்கு எது வந்தாலும் அதைச் சமாளிக்கக்கூடிய ஆற்றல் தேவை. இத்தகைய ஆற்றலை ஒவ்வொருவரும் தன்னிலேயே கொண்டிருந்தால் நாம் அவர்களை தலைமைத் தன்மை உடையவர்களாகக் கருதலாம். இது போன்ற ஒரு தலைமைத் தன்மையை உருவாக்குவதற்கான முயற்சியில்தான் கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்கள் தங்கள் நோக்கத்தை திருப்பியுள்ளன.

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## மறைக்கல்விப் போட்டி - 6.

### பாகம் I

#### புனித லூக்காஸ் சுவிசேஷம்

1. பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

அ) மனந்திரும்பத் .................... தொன்னூற்றொன்பது .................... குறித்து வானகத்தில் உண்டாகும் மகிழ்ச்சியைவிட.......... ....................ஒரு பாவியைக் குறித்து மிகுந்த .................... உண்டாகும்.

ஆ) அப்பா.................... எதிராகவும், உமக்கு முன்பாகவும்....................செய்தேன்.

இ) ஒளியின் மக்களைவிட .................... .................... தம் போன்றவர்கள் இடத்தில் .................... .................... உள்ளவர்களாய் இருக்கின்றனர்.

ஈ) மகனே....................உனக்கு .................... ....................கிடைத்தது, லாசருக்கு .................... .................... கிடைத்தது. இதை நினைத்துப் பார்.

உ) மோயீசனுக்கும் ....................செவிசாய்க்காவிடில் இறந்தோரிடம் இருந்து........ .................... .................... நம்பமாட்டார்கள்.

ஊ) இச்சிறுவருள் ஒருவனுக்கு .................... அவன் கழுத்தில் பெரிய .................... .................... கட்டி .................... .................... தள்ளுவது அவனுக்கு நலம்.

எ) நாங்கள் .................... ஊழியர்கள், செய்ய .................... செய்தோம்.

ஏ) திரும்பி வந்து.................... .................... இந்த அன்னியனைத் தவிர .................... .................... காணோமே.

ஐ) குழந்தைகளை.................... வரவிடுங்கள் .................... .................... ஏனெனில் கடவுளின் .................... ....................

ஒ) கடவுள்.................... நல்லவர்....................

2. மூன்றிற்குச் சந்தர்ப்பம் கூறுக.

அ) கடவுளின் அரசில் செல்வம் உடையோர் நுழைவது எவ்வளவோ அரிது.

ஆ) பார்வை பெறுக உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கியது.

இ) கெட்ட ஊழியனே! உன் வாய்ச் சொல்லைக் கொண்டே உனக்குத் தீர்ப்பிடுகின்றேன்.

ஈ) கழுதைக் குட்டியை ஏன் அவிழ்க்கிறீர்கள்.

உ) என் வீடு செபவீடு, நீங்களோ அதைக் கள்வர் குகையாக்கி விட்டீர்கள்.

ஊ) கட்டுவோர் விலக்கிய கல்லே மூலைக் கல்லாய் அமைந்தது.

எ) இவை நடைபெறவிருக்கும் போது தோன்றும் அறிகுறி என்ன?

### பாகம் II

#### கிறிஸ்தவ போதகம்

1. பின்வரும் கூற்றுக்கள் சரியா, பிழையா எனக் கூறுக.

அ) சுத்த போசன நாட்களில் நாம் இறைச்சி உண்ணலாம்.

ஆ) பொது நலத்தைக் கவனிக்க வேண்டியதே ஒரு நாட்டின் கடமை.

இ) திருச்சபையின் முக்கிய கட்டளைகள் நான்கு.

ஈ) தற்கொலை செய்து தன் உயிரை மாய்த்துக் கொள்ளுகிறவனைப் பற்றி நாம் தீர்ப்புக் கூறலாம்.

உ) உயிருக்கும் சாவுக்கும் அதிபதி கடவுள் மட்டுமே.

ஊ) சர்வேசுவரன் இணைத்ததை மனிதன் பிரிக்கலாம்.

எ) கற்புக்கு காவற்சுவர் போல் இருப்பது அடக்கம்.

ஏ) பொய் பேசுவது உண்மைக்கு எதிரான பாவம்.

(15ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கிறீஸ்தவ வாழ்வுச்...

(13ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தலைமைத் தன்மையை உருவாக்க பயிற்சி அளிப்பதற்காக ஆவணி மாதம் 24ம் 25ம் 26ம் திகதிகளில் மட்டக்களப்பு மன்ரேசா இல்லத்தில் இளைஞர்களுக்கான ''தலைமைத் தன்மை பயிற்சி முகாம்'' ஒன்று நடைபெற்றிருக்கிறது. அகில இலங்கையிலுமுள்ள கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்கள் இப்பயிற்சி முகாமில் பங்கு பற்றியுள்ளன.

இப் பயிற்சி முகாமிற்கான ஆயத்த வேலைகள் யாவும் மட்டக்களப்பு பிராந்திய, கிறிஸ்தவ வாழ்வுச் சமூகத்தினுல் மேற்கொள்ளப்பட்டன. இது போன்ற இரண்டு பயிற்சி முகாம்கள் அகில இலங்கை ரீதியாக குருநாகல் மாவட்டத்தில் சிங்கள மொழியிலும், கொழும்பு முகத்துவாரம் பகுதியில் ஆங்கிலத்திலும் நடைபெற்றன. தற்போது தமிழ் மொழியில் மட்டக்களப்பில் நடைபெற்றிருக்கின்றது. இப் பயிற்சி முகாமில் பாடசாலையில், வீட்டில், ஓய்வு நேரத்தில், தொழிற்தலங்களில், கிறிஸ்தவ வாழ்வுச் சமூகத்தில், திருச்சபையில் எமது தலைமை என்னும் தலையங்கங்களில் பல கருத்துரைகளும், அதைத் தொடர்ந்த அனுபவ ரீதியான செயல் முறைகளும் இடம் பெற்றன. இத்தகைய பயிற்சி முகாம் பல இளைஞர்களை அவர்களின் வாழ்வின் எப்பகுதியிலும் சிறந்த தலைமை வகிக்கத்தக்க ஆற்றலை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

**'இருதயம்'**
செயலாளர் கி. வா. ச.
பிராந்திய அணி, மட்டக்களப்பு.

## மாணவர் மன்றம்...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

2. பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

அ) பொய்யான உதடுகள் ஆண்டவருக்கு ........................

ஆ) பரலோகத்தில் உங்கள் பொக்கிசங்களை சேர்த்து வையுங்கள்; ஏனெனில் ........ ........................

இ) நீ உத்தமனய் இருக்க விரும்பினுல், போய் உனக்குக் ........................ ........................ கொடு.

ஈ) கற்பு நமக்கு ஒரு ........................ ........................ தருகின்றது.

உ) மெய்விவாகம் செய்து கொண்டவர்கள் ஒருவர் ஒருவருடைய ........................ ........................ அது ........................ பாவம்.

ஊ) நாம் வேலை செய்யவேண்டியதன் காரணங்கள்: 1. ........................
2. ........................

எ) நாம் நம் உடலைக் கண்ணியமாக மதிப்பதற்குரிய காரணங்கள்:
1. ........................
2. ........................
3. ........................

### பாகம் III

1. ''திருப்பலியிற் பங்கு கொள்ளும் பொழுதெல்லாம் திருவிருந்திற் பங்கு கொள்ளுதல் சாலச் சிறந்தது'' இக் கூற்றை ஆராய்க. (150 – 200 இடைப்பட்ட சொற்கள்) அல்லது

2. ஒரு கிறிஸ்தவன் தன் மதத்தின் கொள்கைகளையும் படிப்பினைகளையும் ஆழமாக அறிந்து தன் விசுவாசத்தை நாளும் வளர்க்க, ஆழமுள்ளதாக்க, உறுதியுள்ளதாக்க முயல வேண்டும். இதைப் பற்றிய உமது அபிப்பிராயங்கள் என்ன? (150 - 200 இடைப்பட்ட சொற்கள்)

- - - - - - - - - - - - -

விடைப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பும் பகுதி

**மறைக்கல்விப் போட்டி – 5**

**(விடை அனுப்பவேண்டிய கடைசித் திகதி 1-10-72)**

மாணவன்/மாணவி பெயர்: ........................
........................
பாடசாலையின் பெயரும் முகவரியும்: ....
........................
........................

........................
மாணவன்/மாணவியின் கையொப்பம்

........................
தலைமை ஆசிரியர்/தலைவர் கையொப்பம்

- - - - - - - - - - - - -

விடைப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி:—

**அருள்திரு றெக்ஸ் யோ. செபமாலை அடிகள்**
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பேரருள்திரு இக்னேஷியஸ்...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

மட்டுநகரிலே வயோதிபர் மடம் ஒன்றை உருவாக்கினார்கள். திருமலையிலே குரு மடத்தை அமைத்தார்கள். ஆயரின் அன்பின் ஆட்சியிலே புனித கார்மேல்சபை, புனித பிரான்சீஸ்கன்சபை, புனித சூசையப்பர்சபை, திருக்குடும்பசபை இவைகள் தவறாது இயங்கி வருகின்றன.

ஆண்டகை அவர்களின் இயேசுசபையும் இறைவன் பணியிலே மேலோங்கி வளர்கின்றது. இவ்வாறு மட்டுநகர் - திருமலை மேற்றிராசனத்துக்கு உயிரும் ஊட்டமும் அளிக்கும் ஜீவநாடி ஆண்டகை அவர்கள். ஏழைகளுக்கு வாரி வழங்கும் வள்ளல். பேதங்களைப் பிரிவினைகளை ஒழித்து சமத்துவத்தை வளர்க்கும் மாமேதை. 1957ம் வருடப் பெருவெள்ளம், 1958ம் ஆண்டு இனக்கலவரம், 1960ம் வருடம் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றல் இவைகளின் போது பொறுப்புணர்ச்சியுடன் கருமமாற்றியவர்கள் ஆண்டகை அவர்கள். தமது பிறந்தகமான அமெரிக்காவிற்கும் மற்றும் மேல் நாடுகளுக்கும் இதுவரை பல தடவைகள் பிரயாணம் மேற்கொண்டிருக்கிறார்கள். இவருடைய பிரயாணம் வெறும் உல்லாசப் பொழுதுபோக்கல்ல. பிரயாணம் மேற்கொள்ளும் இடங்களிலெல்லாம் இரந்து பண உதவி பெற்றுத் தம் மந்தைகளின் குறைகளை நிவர்த்திப்படுத்துவதற்கும் மேற்றிராசனத்தின் பின்தங்கிய நிலையினைச் சரிப்படுத்தவுமேதான்.

இந்த இருபத்தைந்தாண்டுகளிலும் தம்மை எதிர்கொண்ட எதிர்ப்பு, துன்பம், துயரம், இன்னல் இவைகளையெல்லாம் தம் ஆற்றலாலும், மதியூகத்தாலும் எல்லாவற்றுக்கும் மேலாக இறைவன்மேற் கொண்ட நம்பிக்கையாலும் சாகடித்து வந்துள்ளார் ஆயர் அவர்கள். இளம் வாலிபரிடையே நிலவும் வேலையில்லாத்திண்டாட்டம் எப்பொழுதும் அவர்களின் இதயத்திற்கு வேதனை அளிப்பதாகும். படித்த வாலிபர்களைத் தொழிலில் ஊக்கமூட்டுவதற்காக மட்டுநகரிலே ''இளைஞர் நகரம்'' (Boy's Town), உப்போடையில் ''மீன்பிடித்துறைப்பயிற்சி நிலையம்'', திருமலையில் ''சமூகசேவை நிலையம்'' இவைகளை அமைத்திருக்கிறார்கள் ஆயர் அவர்கள். புளியந்தீவுப்பங்கில் குருமனை ஒன்றினை நவீன முறையிலே கட்டியிருக்கிறார்கள்.

கடமையும் பொறுப்புணர்ச்சியும் மிக்க ஆயர் அவர்கள் தம் மேற்றிராசனத்தின் மக்களின் ஆன்மீக பணியே தமது உயிர் மூச்செனக் கொண்டு தம் உடல் பொருள் ஆவி மூன்றினையும் அந்த இலட்சியத்திற்காக அர்ப்பணித்து வருகின்றார்கள். எமது தாய்மொழியின்மீது தணியாத ஆர்வம் கொண்டவர் தமிழ் மொழியிலே திருப்பலிபூசை சொல்லும் தகுதி பெற்றுள்ளார். உலகின் எந்த நாட்டிற்குச் சென்றாலும், தம் ஆட்சியின் கீழுள்ள குருமார், கன்னியர், சந்நியாசிகள், பொது நிலையினர் அனைவரின் நலன்களைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் மிக்கவராக இருக்கின்றவர் எம் தந்தை அவர்கள்.

''இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூண்டார் பெருமை பிறங்கிற்று உலகு'' என்னும் துறவுப் பெருமைக்குரிய எங்கள் ஆயர் அவர்கள், தமது ஆயர் பணியின் வெள்ளி விழாவைப் புரட்டாதித் திங்கள் 21ந் திகதி கண்டு களிக்கப் போகின்றவேளை, அவரின் மந்தையாகிய எமக்குள்ள பேரானந்தம் சொல்லக் கூடியதன்றோ?

ஆண்டகை அவர்களின் சிறப்புமிக்க பணியை இன்னும் பல ஆண்டுகள் நாமும் எமது மேற்றிராசனமும் பெறவும், ஆண்டகை அவர்களுக்கு நீடித்த வாழ்வையும் குன்றாத சுகபலத்தையும் அளிக்கவும் எல்லாம் வல்ல இறைவனை விசேடமாக வெள்ளி விழா வைபவத்தின்போது பிரார்த்திப்போமாக. ★

## இலக்கிய மன்றம்...

[10ம் பக்கத் தொடர்ச்சி]

டப்பட்டிருந்தது (சந்தியோகுமையோர் அம்மானை -- பொதுப்பாயிரம் காண்க). அவ்வாலயத்துக்கு அருகாமையில் ஒரு நாடக மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் இயேசு சபைக் குருமார் பெரிய திருவிழாக்களின் போது வேதாகம சரித்திரத்திற்குரிய நாடகங்களை நடிப்பித்துக் காட்டுவது வழக்கம். (Jesuits in Ceylon p. 107). ஆகவே, இசை நாடகமாகிய ஞானப்பள்ளும் செவ்வஸ்தியாம் தே பொஞ்செக்கா சுவாமிகளின் உதவியோடு இயற்றப்பெற்று தெல்லிப்பளையிலிருந்த நிரந்தர நாடக மேடையில் மக்களுக்கு நடித்துக் காட்டப்பட்டிருக்க வேண்டும். ★

[வளரும்]

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S. S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் 1-9-72ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media